‘திராவிட மாடல்’ ஆட்சியில் வ.உ.சிதம்பரனாருக்கு பல்வேறு சிறப்புகள் செய்தோம்!

# கழக அரசு அறிவித்த - ‘திருநெல்வேலி எழுச்சி’க்கான நினைவுச் சின்னத்தை தற்போதைய அரசும் கைவிடாமல் நிறைவேற்ற வேண்டும்!

## வ.உ.சி. பிறந்தநாளில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, செப். 6-**

**செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாளில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில்,**

**“கழக அரசு அறிவித்த ‘‘திருநெல்வேலி எழுச்சி”க்கான நினைவுச் சின்னத்தை தற்போதைய அரசும் கைவிடாமல் நிறைவேற்ற வேண்டும்!” என்று வலியுறுத்தியுள்ளார்.**

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

“தியாகத் திருவுளம் வ.உ. சிதம்பரனார் பிறந்தநாள்

நாட்டின் விடுதலைக்காகச் செக்கிழுத்தார், செந்நீர் சிந்தினார், ஆங்கிலேயரை எதிர்த்துக் கப்பல் விட்டார். இது மட்டுமா வ.உ.சி.?




திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார், தொல்காப்பிய உரையைப் பதிப்பித்துள்ளார், ஆங்கில நூல்களை மொழிபெயர்த்துள்ளார், அந்நாளிலேயே தொழிலாளர் உரிமைக்காகப் போராடியுள்ளார்.

இத்தகைய பன்முக ஆளுமையான வ.உ. சிதம்பரனாரின் வாழ்வும் பணிகளும் எல்லோரையும் சென்றடையும் வகையில் கடந்த 5 ஆண்டுகால ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு செக்கிழுத்த செம்மலுக்குச் சிறப்பு சேர்த்தோம்.

அவற்றுடன், 1908 திருநெல்வேலி எழுச்சிக்கான நினைவுச் சின்னத்தையும் அறிவித்தோம். தற்போதைய அரசும் அதனைக் கைவிடாமல், நிறைவேற்றிட வேண்டும் எனத் தமிழர் தம் சிந்தையில் இருந்து என்றும் அகலாத சிதம்பரனாரின் பிறந்த நாளில் கேட்டுக் கொள்கிறேன்!”

இவ்வாறு அவ்வலைதளப் பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மனித நேயத்தால் ஒன்றுபட்ட சமூகத்தைக் கட்டமைக்க

# ஆசிரியர் தினத்தில் உறுதி கொள்வோம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.6-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆசிரியர் தினத்தையொட்டி வெளியிட்ட சமூகவலை தளப்பதிவில், “அறிவால் உயர்ந்து, பகுத்தறிவால் தெளிந்து, மனிதநேயத்தால் ஒன்றுபட்ட சமூகத்தைக் கட்டமைக்க ஆசிரியர் தினத்தில் உறுதிகொள்வோம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

“ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் இருக்கும் எதிர்காலத்தை அடையாளம் கண்டு, மாணவர்களை நல்ல மனிதர்களாக வளர்த்தெடுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு வாழ்த்துகள்!

நொடிப்பொழுதில் விடைகளை வழங்கும் AI காலத்தில், எதையும் பகுத்தறிந்து, சரியான கேள்விகளைக் கேட்கும் தலைமுறையை உருவாக்குவதே இனி ஆசிரியர்களின் பெரும் பணி!

அறிவால் உயர்ந்து, பகுத்தறிவால் தெளிந்து, மனிதநேயத்தால் ஒன்றுபட்ட சமூகத்தைக் கட்டமைக்க ‘ஆசிரியர் தினத்தில்’ உறுதிகொள்வோம்!”

இவ்வாறு அப்பதிவில் - கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் – எழுத்தாளர்

# ப.திருமாவேலன் புதல்வி டாக்டர் ரே.தி.அமிர்தா - டாக்டர் பா.ரபிந்திரன் மணவிழா!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை! உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

**சென்னை, செப்.6-**

**‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் ப.திருமாவேலன் புதல்வி மணவிழா நாளை (செப்.7) சென்னை திருவான்மியூர் ராமச்சந்திரா கன்வென்ஷன் அரங்கில் நடைபெறுகிறது. மணவிழா வரவேற்பு இன்று (செப்.6) மாலை நடைபெறுகிறது.**

**இம்மண விழா பற்றிய விவரம் வருமாறு:-**



புலவர் மு.படிக்கராமு - ப.முத்து லக்குமி, சு.கிருஷ்ணன் - கி.அழகம்மாள் ஆகியோரின் பேத்தியும், ‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் ப.திருமாவேலன் - ரேணுகா திருமாவேலன் இணையரின் புதல்வியுமான டாக்டர் ரே.தி.அமிர்தாவுக்கும் - கா.சுந்தரம் - சு. லட்சுமி, இரா.பாண்டியராஜன் - பா. இராணி அம்மாள் ஆகியோரின் பேரனும், டாக்டர் சு.பாலசுப்பிரமணியன் - சுதா பாலசுப்பிரமணியன் இணையரின் புதல்வருமான டாக்டர் பா.ரபிந்திரனுக்கும் மணவிழா நாளை 7.9.2026 - திங்கள்கிழமை காலை 9.15 மணியளவில் சென்னை திருவான்மியூர் ராமச்சந்திரா கன்வென்ஷன் அரங்கில் நடைபெறுகிறது.

இம்மண விழாவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணவிழாவிற்கு முன்னிலை வகிக்கின்றார்.

புலவர் மு.படிக்கராமு திருக்குறள் நெறி நிகழ்த்துகிறார்.

**மணவிழா வரவேற்பு!**

முன்னதாக - மணவிழா வரவேற்பு இன்று (6.9.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது. இம்மண விழாவிலும் - மண விழா வரவேற்பிலும் கழக முன்னணியினர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஊடகத் துறையினர், பல்வேறு துறைகளின் முன்னணிப் பெருமக்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில், கடையநல்லூர் தி.மு.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தமது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க

# பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுக!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, செப். 6-

விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று உடனடியாக பாசநாசம் அணையிலிருந்து 1500 கன அடி தண்ணீரை திறந்து அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

பாபநாசம் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கக் கோரி, நியாயமான உரிமைக்காகப் போராடிய தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளை அராஜகமாகக் கைது செய்துள்ள த.வெ.க. அரசின்



கொடுங்கோன்மை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தாமிரபரணி ஆற்றுப்பாசனத்தை சார்ந்துள்ள சுமார் 5,000 ஏக்கர் வாழைப் பயிர்கள் தண்ணீரின்றி கருகும் நிலையில், விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. பலமுறை மனு அளித்தும், தொடர் போராட்டங்கள் நடத்தியும் மாவட்ட நிர்வாகமும் நீர்வளத்துறையும் நடவடிக்கை எடுக்காமல், விவசாயிகளை சாலையில் போராடும் நிலைக்குத் தள்ளியுள்ளது, இந்த அரசு.

விவசாயிகளின் கோரிக்கையை உடனடியாக ஏற்று, பாபநாசம் அணையிலிருந்து 1,500 கனஅடி தண்ணீரை திறந்துவிட்டு, அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தி உள்ளார்.

கடல் சீற்றத்தால் பாதிக்கப்படும் மீனவர்களைப் பாதுகாத்திடுக!

# குளச்சல் மீன்பிடித் துறைமுகம் விரிவாக்கப் பணியை விரைந்து முடித்திடுவீர்!

## சட்டப்பேரவையில் எஸ்.ஆஸ்டின் கோரிக்கை!

சென்னை, செப்.6-

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் பேசுகையில் குளச்சல் மீன்பிடித் துறைமுகம் விரிவாக்கப் பணியை விரைந்து முடித்திட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, அழிக்கால், பிள்ளைத்தோப்பு மீனவர் கிராமங்கள் மற்றும் குளச்சல் மீன்பிடித் துறைமுகம் EXTENSION இவை இரண்டு குறித்தும், நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு தெளிவாகத் தெரியும். குளச்சல் மீன்பிடித் துறைமுகம் EXTENSIONஐப் பொறுத்தவரையில், அடிக்கல் நாட்டப்பட்டு கிட்டத்தட்ட 8 மாதங்கள் ஆகிவிட்டன.

நம்முடைய உயர் அதி



காரிகள் அனைவரும் பணியைத் தொடங்குவதற்கான வாய்மொழி உத்தரவைக் கொடுத்து விட்டார்கள். ஆனால், இதுவரைக்கும் மாவட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்கு அந்த தகவல் OFFICIAL ஆக சென்று சேராத காரணத்தினால், மேல் அதிகாரிகளினுடைய உத்தரவு சரியாக, OFFICIAL ஆக மாவட்டத்தில் உள்ள மீன்வளத் துறை அதிகாரிகளுக்கு சென்று அடையாத காரணத்தினால், அந்தப் பணிகள் இன்னும் துவங்கப் படாமல் 8 மாத காலங்கள் ஆகிவிட்டன.

எனவே, அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத்தொடர் முடிந்து, நாளைய தினமே அந்தப் பணியைத் தொடங்குவதற்கான உத்தரவை நீங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அழிக்கால், பிள்ளைத்தோப்பு மீனவர் கிராமங்கள் தொடர்ந்து கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றன. மீனவர்கள் பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்புக்காக, கிட்டத்தட்ட 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு வந்திருக்கின்றது.

இந்த அறிவிப்பில் இது குறித்து வரும் என்று எதிர்பார்த்தோம். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர், நம்முடைய பொறுப்பு அமைச்சர் ஆகியோர் அறிவிப்பில் வரும் என்று அவர்களுக்கு உத்தரவாதம் கொடுத்திருந்தார்கள், வரவில்லை. இருந்தாலும், பரவாயில்லை. அதிகாரிகளுக்கு உத்தரவாதம் கொடுத்திருக்கின்றார்கள். உடனடியாக, இந்த கூட்டத்தொடர் முடிந்தவுடனே அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு கோரிக்கைகளுக்கும், நீங்கள் ஒரு உத்தரவாதத்தை கொடுத்து விட்டீர்கள் என்றால், அந்த மீனவர்கள் உங்கள் மீது நம்பிக்கையாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆஸ்டின் பேசினார்.

அடுத்த பிரதமர் யார் என்ற ‘போலி சர்வே’ மூலம் காக்ரோச்சுக்கு எதிராக மக்களை ஏமாற்றி வருவது

# விஜய் ஆட்சியை தூக்கிச் சுமக்கும் பெயரில்லா கூட்டணியினர் அறிவார்களா?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு கேள்வி!

நெல்லை, செப்.6-

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது.

2026 இல் சட்டமன்றத் தேர்தல் முடிவடைந்ததும் வி.சி.க.,சி.பி.ஐ.,சி.பி.எம்., ஐ.யு.எம்.எல். ஆகிய கட்சி தலைவர்களையும் மற்றும் அ.தி.மு.க.வில் ஒரு பிரிவு தலைவர் இல்லத்திற்கும் சென்று கெஞ்சி கூத்தாடி ஆதரவை பெற்று ஆட்சி அமைத்தவர் விஜய்.

ஆனால் காங்கிரஸின் மூத்த தலைவர் ராகுல் காந்தியையோ,தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரையோ நேரில் சந்தித்து ஆதரவு கேட்காத தற்குறி த.வெ.க.வுக்கு மானம்,மரியாதை இழந்து ஆதரவு கொடுத்து பதவியேற்பு விழாவில் கலந்து கொண்ட அவமானம் போதாது



என்று,அடுத்த பிரதமர் விஜய்தான் என்று அமைச்சர் ஒருவர் சட்டமன்றத்தில் பேசியபோது சட்டமன்ற மேஜையை தட்டி வரவேற்கும் காங்கிரஸ் உறுப்பினர்களின் நிலையை பார்த்து இந்த நாடே வெட்கித் தலைகுனிகிறது.

அமைச்சர் பதவி ஒன்றை வாங்கியதால் 100 நாட்களில் 12 ஆணவக் கொலைகள் நடந்த பின்பும் மூச்சு விடாமல் கைகட்டி வாய் பொத்தி நிற்கும் வி.சி.க.

ஆட்சிக்கு ஆதரவு கொடுத்த ஒரே காரணத்திற்காக அத்தனை கம்யூனிஸ்ட் மாணவர்கள்,இளைஞர்களின் விலாசத்தையும் கண்டறிந்து அரசியல் வாழ்வை முடிப்பதற்கு தலைமைச் செயலாளர் மூலம் நடவடிக்கை எடுத்த த.வெ.க.ஆட்சியை தூக்கி சுமக்கும் இடதுசாரிகளை பார்க்கும் போது வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை.

இந்திய துணைக்கண்டத்தில் எல்லா காலத்திலும் இஸ்லாமியர்களுக்கு துணை நின்ற தி.மு.க.வை விட்டு விலகி திடீர் தலைவர் ஆட்சிக்கு ஆதரவு கொடுத்ததால் பக்ரீத் அன்று ஆடு,மாடு, ஒட்டகம் கூட வெட்ட முடியாமல் வெட்கித் தவித்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நிலைமை இன்னும் பரிதாபம்.

தற்போது காக்ரோச் ஜனதா பார்ட்டி Genz இளைஞர்களிடம் ஒரு கேபினட் அமைச்சரை இழந்த பாரத பிரதமர் அச்சத்தில் காக்ரோச்க்கு எதிராக விஜய்யோடு இணைந்து வட இந்தியா முழுவதும் “Visay Dalapathi” என்ற “Fake Reels” பலநூறு கோடி ரூபாய் செலவில் இந்தி மொழியில் தயாரித்து காக்ரோச்க்கும்,ராகுல் காந்திக்கும் எதிராக இந்தியா முழுவதும் பரப்புவதோடு அடுத்த “பிரதமர் யார்” என்ற போலியான சர்வே மூலம் விஜய் 3 வது இடத்திலும் காக்ரோச் 4 வது இடத்திலும் இருப்பதை போன்ற பிம்பத்தை உருவாக்கி மக்களை ஏமாற்றி வருவது நாடறிந்ததே, இந்த நிலையில் விஜய் ஆட்சியை தூக்கி சுமக்கும் பெயரில்லா கூட்டணி கட்சியினர் இந்த கொடுமையை அறிவார்களா?



தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆசாத் நகரில் வெடி விபத்து ஏற்பட்டதில் 20க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்து பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.இது பற்றிய தகவல் அறிந்ததும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறினார்.உடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம்,வார்டு கவுன்சிலர் ராமகிருஷ்ணன்,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் ஆகியோர் உள்ளனர்.